பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–7–2017) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகளை இயற்றியது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (பி1) துறையின் 5-7-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 89–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 40(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

122. மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

123. மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

124. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

125. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2017–2018. (தமிழ்)

126. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மக்கள் சாசனம், 2017–2018. (தமிழ்)

127. “வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் வரலாற்றுச் சாதனைகள், 2011–2017” என்கிற சிறுநூல். (தமிழ்)

128. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

129. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2016–2018)

130. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2016–2018)

131. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2016–2018)

132. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2016–2018)

133. பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2016–2018)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS